## தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் - 2013

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நானாவித நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளால் நிறுவனத்திற்கு 1985 முதல் 2005 வரையான காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மானியங்களான ரூபா 25,493,260 அபிவிருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் சீராக்கங்கள் இன்றி மானியங்களின் கீழ் தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கெரடிஅல்ல மண்சரிவை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,167,402 தொகையான செலவினங்களுக்கான நிதிஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமாக நிதிச் செயலாற்றல் அறிக்கையில் ரூபா 11,641,621 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இதற்கு உரித்தான விபரமான குறிப்புகளில் அச் செலவினம் ரூபா 10,735,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவால் 2012 ஆம் ஆண்டின் போது 09 வெளித்தரப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ரூபா 7,024,787 தொகை அறவிடப்படுவதற்கு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்ததுடன் அப் பெறுமதி கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 18,708,860 பெறுமதியான மழைநீர் அளவீட்டு உபகரணம் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்தாகக் கருதப்பட்டு இதற்காக ரூபா 29,000 தொகை பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படுவது தொடர்பாக 15 பிரதேச சபைகளால் மீளாய்வாண்டிற்காக ரூபா 846,360 தொகையும் முன்னைய

ஆண்டிற்காக 04 பிரதேச சபைகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 141,933 தொகையான வருமானமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதியில் 16 சதவீதம் பிரதிபலிக்கப்பட்ட ரூபா 4,602,121 தொகை 5 முதல் 17 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்ட போதிலும் அம் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தால் 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவுகளுக்காகவும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற பணத்தைப் பார்க்கிலும் கூடியளவு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,500,000 தொகை பெறவேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

புவியியல் தொழில்நுட்ப பொறியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் நடைமுறைவேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 17,666,169 தொகையான மீதி தொடர்பான முன்னேற்ற அறிக்கை, சான்றுறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஆகிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 9.4 ஆம் பந்தி | வெளிநாட்டுப் பயணத்தின் போது ஓர் உத்தியோகத்தருக்கு 05 ஆண்டு காலப்பகுதியின் போது வெப்ப உடைக் கொடுப்பனவு ஒரு முறைக்கு மேல் வழங்கப்படலாகாத போதிலும் ஒரு உத்தியோகத்தருக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளாகிய 02 ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 15,173 தொகையும் ரூபா 15,176 தொகையுமாக வெப்ப உடைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | முற்பணமாக வழங்கப்பட்டிருந்த பணம் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிராத 57 சந்தப்பங்களின் போது ரூபா 1,589,263 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை 02 |

| | | |
|---|---|---|
| | | மாதங்கள் முதல் 05 மாதங்கள் வரையான காலப்பகுதியாக தாமதமாகத் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | முற்பணமாக வழங்கப்பட்டிருந்த சகல பணமும் நிதியாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு தீர்க்கப்படாத முற்பணத்தொகையின் கூட்டுத்தொகை ரூபா 455,277 ஆகக் காணப்பட்டது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 757(1)(அ) மற்றும் (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டு அவை சரியென களஞ்சிய உத்தியோகத்தரால் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 | நிறுவனத்திடம் உள்ள 18 வாகனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை நிறுவனத்தில் உள்ள வாகனங்களின் எரிபொருட் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் உள்ள வாகனம் தொடர்பான எரிபொருள் பயன்பாடு மீளாய்வாண்டின் போது ஒரு தடவையேனும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான விளைவுகள் ரூபா 11,227,959 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,461,664 ஆகக் காணப்பட்டது. இதன் படி நிதி விளைவுகளில் ரூபா 10,233,705 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளின் வருமானம் ரூபா 36,962,917 ஆல் அதிகரித்திருந்ததுடன் ஆராய்ச்சி மானியமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 11,160,000 தொகையான அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 63,637,836 ஆல் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அனர்த்த இடரைக் குறைக்கும் பாதுகாப்பினை அடிப்படையாயக் கொண்ட சூழலுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தி தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்குவது நிறுவனத்தின் பிரதான செயற்பணியானதுடன் நடைமுறையில் மண்சரிவு அபாயமுள்ள வலயத்தை வரைபடத்தில் குறித்து மண்சரிவைக் குறைக்கும்

செயற்திட்டத்தை மேற்கொள்வது முதன்மையான செயற்பாடாக இருந்தது. இச் செயற்பணியும் செயற்பாட்டையும் மேற்கொள்கையில் மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தால் எய்தப்பட்ட செயலாற்றலின் ஒட்டுமொத்த தகவல்கள் பின்வருமாறாகும்.

(அ) மண்சரிவு ஆபத்துள்ள வலயத்தை வரைபடத்தில் குறிக்கும் செயற்திட்டம்

நிறுவனத்தால் மண்சரிவு அபாயங்களை இனங்காணல், எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் இது தொடர்பான இடர் 1:10,000 மற்றும் 1:50,000 அளவுத்திட்டத்திற்கு வரைபடத்தில் குறித்துக் காண்பிப்பதன் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது 11 மாவட்டங்களில் 32,972 சதுர மீட்டர்கள் வரைவதற்கிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இடர் வலய வரைபடம் குறித்தல் செயற்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் 6,720 சதுர மீட்டர்களில் 1:10,000 அளவிலான 168 வரைபடம் குறிப்புகள் மேற்கொள்ளப்பட இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 2,320 சதுர கிலோமீட்டர்களுக்கான 58 வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கு முடியாதிருந்தன.

(ii) வரைபடம் குறித்தல் நடவடிக்கைகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பௌதீக திட்டங்களில் உரிய வரைபு குறித்து பூர்த்தியாக்கப்பட வேண்டிய காலம் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட 51 வரைபடங்கள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறெனினும், உரிய வரைபடக் குறிப்பு நடவடிக்கைகளின் நிதி ரீதியான முன்னேற்றம் பாதீட்டு மதிப்பீட்டுடன் இணங்கும் வகையில் ஆண்டின் இறுதியில் மீள சீராக்கப்படுவதால் இந் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றமும் எஞ்சிய ஏற்பாடு தொடர்பான விபரமும் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மண் சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கல்

நிறுவனத்தால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவலின் படி, மண்சரிவு அபாயத்துடன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டிட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கட்டிடம் நிர்மாணிக்கும் நபர்களால் மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கை உரிய உள்ளுராட்சி நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இச் செயற்பாட்டிற்காக நிறுவனத்தால் 10 மாவட்டங்களில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படுவது தொடர்பாக மண்சரிவு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படி, இவ் அறிக்கை வழங்கப்படுவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 30,475,433 தொகையான ஓர் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசத்திற்கு அண்மித்த கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பாக உரிய சான்றுறுதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு தொடர்பாக மக்கள் தெளிவூட்டப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இவ் விடயங்கள் தொடர்பாக கிராம சேவகர்கள் பொது மக்களுடன் முறையான ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்கவில்லை. இதன் படி சொந்தமாக

மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பாக இத்தகைய சான்றுறுதியைப் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்படுகையில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீளக் கையளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்குள்ள வாய்ப்பைத் தவிர்க்கும் வகையில் உரிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான தரவுக் களஞ்சியம் ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், நுவரெலியா மாவட்டத்தின் பதியபெலெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவின் பதியபெலெல்ல சிறிய அளவிலான மின்சக்தி செயற்திட்டத்தின் நிர்மாணிப்பிற்காக நிறுவனத்தால் வழங்கப்பட்ட யோக்கியதை தொடர்பான அடிப்படை புவியியல் மெய்மையாய்வு அறிக்கையின் அவதானிப்பின் படி இப் புவியின் மண்சரிவு அபாய நிலை நிலவியமையால் பரிந்துரைக்கப்பட்ட நிர்மாணிப்பிற்காக அந் நிலம் ஏற்றதல்ல என்ற உறுதிப்பாடு இருந்த போதிலும் உரிய தரப்பினரால் அவ் அறிக்கை கருத்திற்கொள்ளப்படாது ரூபா 2,087,960 தொகை செலவில் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு சட்ட அதிகாரம் ஒன்று அமைப்பிற்கு இல்லாததுடன் இது தொடர்பாக உரிய உள்ளூராட்சி நிறுவனம் செயற்பட வேண்டும் எனவும் இது தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

(iii) உரிய சான்றுறுதியைப் வழங்குவதற்காக பிரதேச சபையிகளிலிருந்து ரூபா 27,466,943 தொகை அறவிட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 948,393 தொகை நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படாதிருந்தமையால் பிரதேச சபைகளிலிருந்து அறவிடப்பட்ட பணம் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கும் முறைமையை முறையாகப் பேணியிருக்கவில்லை.

(இ) கெரடிஎல்ல மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்தின் கீழ் உரிய பிரதேசத்தின் மண்ணரிப்புத் தொடர்பான எச்சரிக்கையை பாரியளவில் எதிர்நோக்கிய 50 வீடுகள் அவ் ஆபத்திலிருந்து விடுபடுவது, சிறுபகுதிகள் உடைந்து வருவது வேறு பிரதேசத்திற்கு திருப்புவதற்காக மண் நிரப்பி கட்டொன்றை நிர்மாணித்து பிரதான வீதிகள் சிலவற்றை மீள அமைத்தல் 2012 முதல் 2016 வரையான காலப்பகுதியின் போது செயற்படுத்துவதற்கு இருந்தது. இச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 93,011,363 ஆகக் காணப்பட்டது. இதில் முன்னைய ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய கிரயத்தின் பெறுமதி ரூபா 12,750,000 தொகையான வேலைகள் அவ் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் அவ் வேலைப்பகுதிகளின் கிரயம் ரூபா 11,550,000 தொகையான வேலைப் பகுதிகள் 2013 செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பதவியணி நிர்வாகம்**

நிறுவனத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2012 மார்ச் 02 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிட ஊழியர்களின் எண்ணிக்கை 57 ஆகும். இவ்வாறே நிரந்தர பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 41 ஆகக் காணப்பட்டது. நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு நேரடியாகத் தொடர்புபடும் 27 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இதற்காக உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு இரண்டு வருட காலத்திற்குத் தாமதமாக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் மண் பரிசோதனை ஆய்வுகூடம் எனும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வேறான ஓர் நிறுவனமாக 1993 செப்தெம்பர் 29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் கீழ் முறையான அரச நிறுவனம் ஒன்றாக நிறுவனம் கூட்டமைக்கப்பட்டிராத காரணத்தால் ஆபத்தான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்களுக்கு எதிராக நிறுவனத்திற்கு எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவனத்தின், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த பௌதீக செயற்பாட்டைக் கருத்திற்கொள்ளாது அந் நிதி இலக்கை எய்திக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இடர் வலயத்தை வரைபடத்தில் குறித்தல், மண்சரிவைக் குறைத்தலுக்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பான பௌதீகச் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரைக் கொண்டிருந்ததுடன் நிறுவனத்தின் தலைமைப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கொடுப்பனவுகள் மற்றும் பௌதீகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முன்னேற்றம் தொடர்பான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கான நிதி இலக்கை தயாரிக்கையில் இதற்காக போதிய கவனம் எடுக்கப்பட்டிராமையும் பாதிடப்பட்ட வருமானமும் செலவினமும் இலக்குகள் எய்தப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பாதீடிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே நிலவிய பாரிய வேறுபாட்டின் போது தெளிவாகியது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகள் எய்தப்படல்

நிறுவனத்தால் இடர் அபாயத்தை குறைப்பதற்காக நாட்டின் மலைநாடுகளின் மண்சரிவுகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதனை ஒத்த இடர் கொண்ட பகுதிகளில் வரைபை வரைந்து அப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பான மண்சரிவு இடர் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல் போன்ற பாரிய பொறுப்புகள் ஏற்கப்படுகின்றன.

மண்சரிவு இடர் வலயங்களை வரைவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மண்சரிவு இடருடனான பகுதிகளை இனங்கண்டு பல்வேறு நிறுவனங்களின் மூலம் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கொள்கை வகுத்தல், அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், முழுமையான மண்சரிவு அபாயங்களை அறிவித்தல், மண்சரிவு அபாயத்துடன் கூடிய பிரதேசங்களில் கட்டிடங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

மேற்குறித்த விடயங்களுக்கு மேலாக 2013 யூன் 30 வரையிலும் ரூபா 2,677,773 தொகை செலவிட்டு மண்சரிவு, சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற இடர்களுக்கு ஈடுகொடுக்கும் 06 மாதிரி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. நிறுவனத்தால் இடர்களுக்கு ஈடுகொடுப்பது தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய கைநூல் வழங்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) பதவியணி நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு